(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 9(3).]

# பாராளுமன்றம்

## 9ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 ஓகத்து 23 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2013 செத்தெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 ஓகத்து 01 ஆம் திகதிய 1821/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 யூலை 15 ஆம் திகதிய 1819/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## 2013 ஒற்றோபர் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2605/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகக் கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இயக்கப்பாட்டுள்ள துறைமுகமாக ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் தற்போதைய பணியாட்தொகுதியின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பணியாட்தொகுதியின் பொருட்டு அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து ஆட்சேர்க்கப்பட்டோர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2946/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளையும்;

(ii) உண்மையில் உயர் கல்விக்காக செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) மேற்படி தொகைகள் உண்மையில் செலவிடப்பட்ட செலவினத் தலைப்புகளையும்;

(iv) உயர் கல்விக்காக மாதாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் அப்பணம் மாற்றப்பட்டுள்ள செலவினத் தலைப்புகள் ஆகியவற்றையும்;

(v) வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2988/ '12

கௌரவ புத்திக பதிரண,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெரணியகல பிரதேச செயலாளர் பிரிவின் மாலிபொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வனசீவராசிகள் பேணல் திணைக்களத்திற்குச் சொந்தமான 'சமனல அடவிய' இயற்கை ஒதுக்கத்தில் அமைந்துள்ள அலிஹத்த எனப்படுகின்ற நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்தி மூன்று மெகாவொற் கொள்ளளவுடைய சிறிய நீர்மின் நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணிப்பு சுற்றாடல் சட்டங்களை மீறி இடம்பெறுகின்றது என்பதையும்;

(iii) மேற்படி நீர்மின் நிலையத்தை நிர்மாணிப்பதால் தீவிர சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதாக சுற்றாடலியலாளர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர்மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான சட்டபூர்வ அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) அதனை நிர்மாணிக்கின்ற ஆள் அல்லது நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) இடம்பெறுகின்ற சுற்றாடல் பாதிப்பினைக் கருத்திற்கொண்டு மேற்படி நீர்மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3356/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3408/ '13

கௌரவ அஜித் குமார,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மீன்பிடிப் படகுகள் அல்லது மீன்பிடிப் படகுகள் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள், மீன்பிடிப் படகுகளுக்கான என்ஜின்கள், வலைகள் மற்றும் வலைகளையும் உபகரணங்களையும் உற்பத்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் ஏனைய மீன்பிடி உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படும்போது அறவிடப்படுகின்ற வரி வகைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு பொருளுக்கும் அறவிடப்படுகின்ற ஒவ்வொரு வரி வகையினதும் வீதங்கள் எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3576/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தபால் சேவையை வலைப்பின்னலொன்றாக்குவதற்காக ரூபா 30 கோடிக்கு மேற்பட்ட பணத்தொகையொன்று செலவிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட கனணிகளும் துணைப்பாகங்களும் 05 வருடகாலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) கொள்வனவு செய்யப்பட்ட கனணிகளின் உத்தரவாதக் காலம் தற்போது முடிவடைந்துள்ளதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ள நபர் ஊழல் குற்றச்சாட்டொன்றில் குற்றவாளியாகியுள்ளாரென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாதெனக் கூறி தபால் மாஅதிபர் பொறுப்புக்கூறுவதிலிருந்து விலகியுள்ளாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ)மேற்படி கருத்திட்டதிற்காக ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 30 கோடிக்கு மேலதிகமாக மேலும் ரூபா 35 கோடியை தபால் திணைக்களம் கோரியதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3600/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கை ஊழியர்களின் நலனோம்புகை நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் இலங்கைத் தூதரகங்களுக்கு நலன்புரி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) வெளிநாடுகளில் பல்தரப்பட்ட துன்புறுத்தல்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகின்ற இலங்கை ஊழியர்களுக்கு இவர்களில் பெரும்பாலான உத்தியோகத்தர்களிடமிருந்து ஒழுங்கான சேவை கிடைப்பதில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி நலன்புரி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும் போது கவனத்திற் கொள்ளப்பட்ட தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) நியமிக்கப்பட்டுள்ள மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதவிக்கு சர்வதேச சட்ட திட்டங்கள் தொடர்பாகவும், சம்பந்தப்பட்ட நாட்டின் மொழி மற்றும் கலாசாரம் தொடர்பாகவும் அறிவினையும் தகைமைகளையும் கொண்ட உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3625/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் "அளவையியல் விஞ்ஞான" பீடத் தொகுதி மற்றும் புதிய விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட தரப்பினர் யார்;

(ii) தற்போது அந்த நிர்மாணப் பணிகளின் தரம் தொடர்பாக பிரச்சினை எழுந்துள்ளதா;

(iii) அவ்வாறெனின், அது சம்பந்தமாக புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3719/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கர்னல், மேஜர் மற்றும் ஏனைய இராணுவ பதவிகள் வழங்கப்பட்டுள்ள அதிபர்கள், கல்வி நிருவாக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பாடசாலைக் கல்வியுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) கல்வியுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இராணுவ பதவிகளை வழங்குவதற்கான தேவை யாதென்பதையும்;

(iii) குறித்த பதவிகள் வழங்கப்பட்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் வழங்கப்பட்ட பதவிகள் அடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) குறித்த பதவிகளை வழங்குவதற்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(v) அவ்வாறான பதவிகள் வழங்கப்படுவதன் மூலம் பாடசாலைக் கல்விக்கு ஆற்றப்படும் சேவை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3774/ '13

கௌரவ விஜித பேருகொட,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1987 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையே சனாதிபதி கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன அவர்களாலும் பிரதம அமைச்சர் கௌரவ ராஜீவ் காந்தி அவர்களாலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட திகதி மற்றும் உடன்படிக்கை களில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் சுருக்கமாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2606/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் பொழிப்பின் 67 ஆம் பக்கத்திலுள்ள, வெளி மாகாணங்களில் கடமையாற்றுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தல் பற்றிய விசேட சட்ட அறிவினை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வழிகள் இல்லையெனக் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) வெளி மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கான மதியுரைகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அலகுகளை தாபிக்கும்படி மேற்படி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3005/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் மருந்துகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளையும்;

(ii) உண்மையில் மருந்துகளுக்காக உண்மையாகச் செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) மேற்படி தொகைகள் உண்மையில் செலவிடப்பட்ட செலவினத் தலைப்புகளையும்;

(iv) மருந்துகளுக்காக மாதாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் அப்பணம் மாற்றப்பட்டுள்ள செலவினத் தலைப்புகள் ஆகியவற்றையும்;

(v) வரவு செலவுத் திட்டத்தில் மருந்துகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3012/ '12

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஓய்வுபெற்ற மற்றும் ஓய்வுபெற எதிர்பார்த்திருக்கும் ஊழியர்களின் பிள்ளைகளை தந்தை மகன் அடிப்படையில் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் தொழில்நுட்பம் சாராத இரு பயிலுநர் குழுக்களாக ஆட்சேர்த்து இந்நிறுவனத்தில் மூன்று வருட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இப்பயிற்சி பெற்றோருக்கு இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் தொழில் வழங்கப்படாமை காரணமாக இவர்கள் பெரிதும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) இவர்களுக்குத் தொழில் வழங்காமல் வேறு நபர்களுக்கு நட்பின் பேரில் இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் தொழில் வழங்கப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை தொழில் வழங்கப்படாமை குறிப்பிட்ட பயிற்சியைப் பெற்றவர்களுக்குச் செய்யும் பெரும் அநீதியாகுமென்பதையும்;

(ii) இப்பயிற்சி பெற்ற ஊழியர்களிடமிருந்து பயன்பெறாமை மிகப் பெரிய குற்றமாகுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் தந்தை மகன் அடிப்படையில் பயிற்சி பெற்றுள்ள பிள்ளைகளுக்கு துரிதமாக பொருத்தமான தொழில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3357/ '12

கௌரவ பி. ஹரிசன்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3872/ '13

கௌரவ செஹான் சேமசிங்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதிக்குள்,

(i) புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள, நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற, நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றும் மேம்படுத்தப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நங்கூரமிடும் இடங்கள், உவர்நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் துறைகள், ஐஸ் உற்பத்திச்சாலைகள், குளிரூட்டல் அறைகள், படகு திருத்தும் இடங்கள் மற்றும் வலை உற்பத்தித் தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மீன்பிடி நடவடிக்கைகளுக்காக புதிதாக ஈடுபடுத்தப்பட்டுள்ள மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 ஒற்றோபர் 09, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2619/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்ற தொழிலின்மை வீதம் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி தொழிலின்மைக்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தீர்வுகள் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள எடுக்கும் காலம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3013/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹ/தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவரொருவர் 2007 ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியன்று தங்காலை பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுகையில் இடைவழியில் தங்காலையின் அப்போதைய நகர பிதாவினால் பாரதூரமான விதத்தில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இது தொடர்பாக தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவ ஆலோசக ஆசிரியருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் தங்காலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி முறைப்பாடு மேற்படி பொலீஸ் நிலையத்தின் முறைப்பாட்டு இலக்கம் C.W.I.B 127ஆம் பக்கத்தின் 24 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம் மேற்படி நகரபிதாவுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தங்காலை நகரத்தின் ஓய்வுபெற்ற பிரசைகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) ஆமெனில், மேற்படி முறைப்பாடு தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை மெற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3112/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3358/ '12

கௌரவ பி. ஹரிசன்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3409/ '13

கௌரவ அஜித் குமார,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில்,

(i) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மீன்களின் அளவு;

(ii) அதன் பெறுமதி;

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அல்லது மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக அதன் பெறுமதி;

எவ்வளவென்பதை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2006 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட மீன்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) 2006 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மீன்களின் அளவு மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்டடின் மீன்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) 2006 முதல் 2012 வரையிலான காப்பகுதியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கருவாடு, மாசி, இறால் அல்லது ஏனைய மீன்சார்ந்த உற்பத்திகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பொருளினதும் ஏற்றுமதிப் பெறுமதி மற்றும் இறக்குமதிப் பெறுமதி எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3630/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில்,

(i) முகாமைத்துவ பீடத்தில் விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி பீடத்தில் உள்ள பேராசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அளவையியல் விஞ்ஞான பீடத்தில் விரிவுரையாளர் மற்றும் ஏனைய கல்விசார் பணியாட்டொகுதியில் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(iv) சமூகவியல் மற்றும் மொழிப் பீடத்தில் விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3677/ '13

கௌரவ விக்டர் அன்டனி,— தொழில்னுட்பம், ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரையான காலப்பகுதியில் தேசிய ஆராய்ச்சி சபை, தேசிய விஞ்ஞான மன்றம், ஒத்திசைவு மதிப்பீட்டுக்கான இலங்கை ஏற்றங்கீகார சபை மற்றும் தேசிய விஞ்ஞான, தொழினுட்பவியல் ஆணைக்குழு ஆகிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பியல்பான கடமைப் பொறுப்புகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் அலுவல்களின் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பெறப்பட்டுள்ள நலன்கள் யாவையென்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் அமைச்சினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள சேவைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3682/ '13

கௌரவ நிமல் விஜேசிங்க,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள கிரிந்தி ஓயா நீர் வழங்கல் திட்டத்தை புனரமைப்பதற்கும் விஸ்தரிப்பதற்குமான கருத்திட்டத்தின் நோக்கம் யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) இதன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட திகதி யாது;

(iv) இதிலிருந்து பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாது;

(vi) மேற்படி செலவினை ஏற்ற நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3721/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 மார்ச் மாதம் 06ஆம் திகதி அல்லது அதற்கு அண்மியதொரு திகதியில் தமிழ் நாட்டின் மதுரையில் அமைந்துள்ள மிஹின் லங்கா விமானக் கம்பனியின் அலுவலமொன்றை சிலர் தாக்கியுள்ளார்களா என்பதையும்;

(ii) இத்தாக்குதலின் போது சேதமான சொத்துக்களின் பெறுமதி யாதென்பதையும்;

(iii) குறித்த அலுவலகம் தாக்குதலுக்கு உள்ளானமை தொடர்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இது தொடர்பாக இந்திய அரசினால் விசாரணையொன்று நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) குறித்த விசாரணையின் தகவல்கள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3743/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டளவில் நாட்டின் வரி முறைமையை ஆராய்ந்து தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ள சனாதிபதியினால் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய ஆணைக்குழு குறிப்பாக எப்போது நியமிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் அவர்களின் இணைப்பையும்;

(iii) ஆணைக்குழுவின் அறிக்கை எப்போது நிறைவடைந்தது என்பதையும் அது எப்போது சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது என்பதையும்;

(iv) இவ்வறிக்கை எப்போது சபையில் சமர்ப்பிக்கப்படும் என்பதையும்;

அவர் கூறுவாரா?

(இ) (i) மேற்கூறிய ஆணைக்குழுவின் நியமனத்துக்கு முன்னைய வருடத்துக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அரசாங்க வருமானத்தையும்;

(ii) 2012ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அரசாங்க வருமானத்தையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3746/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 6 ஆம் தரத்திலிருந்து உயர் தரம் வரை ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்கும் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உயர் தரம் மாத்திரம் ஆங்கில மொழி மூலம் போதிக்கும் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அரசின் ஆங்கில மொழி மூலப் பாடசாலைக் கல்வி திருப்தியளிக்கக்கூடிய மட்டத்தில் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3770/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கலை, கலாசாரம், இலக்கியம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக மக்கள் செறிந்து வாழும் கிண்ணியா நகரத்தில் கலாசார நிலையமொன்றைத் தாபிக்குமாறு கல்வியியலாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரால் கடந்த காலங்களில் பல்வேறு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருப்பதை அமைச்சர் அறிவாரா?

(ஆ) மேற்சொன்ன அம்சங்களையும் மக்களின் ஏனைய செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்கென கிண்ணியா நகரத்தில் அத்தகைய கலாசார நிலையம் ஒன்றைத் தாபிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3912/ '13

கௌரவ ருவன் ரணதுங்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முப்படைகளின் மருத்துவ சேவையிலிருந்து சட்டரீதியாக நீங்கியுள்ள மருத்துவர்களை மீண்டும் அரசாங்க மருத்துவ சேவைக்கு ஆட்சேர்க்கும்போது சேவை அனுபவம், தரம் மற்றும் சேவை மூப்பு கவனத்திற் கொள்ளப்படாது இவர்கள் ஆரம்ப தரத்தின் மருத்துவர் பதவியில் அமர்த்தப்படுகின்ற அநீதியானதொரு முறையியல் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) இராணுவ சேவையிலிருந்து நீங்கி தொடர்ந்தும் நாட்டுக்கு சேவையாற்றுவதற்கு விரும்புகின்ற பெரும்பாலான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இந்த நிலைமை காரணமாகியுள்ளது என்பதையும்;

(iii) இவ்வாறானதொரு நிலைமையிலும், அரசாங்க மருத்துவ சேவையில் இணைந்து கொண்ட மருத்துவர் திரு எம்.டி.டபிள்யு. லொக்குகே உள்ளிட்ட மருத்துவர்கள் பலர் தற்போது கடும் அநீதிக்கு உள்ளாகி வருகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தரத்தை குறைத்து மேற்படி மருத்துவர்களை அரசாங்க மருத்துவச் சேவைக்கு ஆட்சேர்ப்பதானது, இராணுவ சேவையின் கீழ் இவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையைத் தவறொன்றாகக் கருதி தண்டனை வழங்குதலாக அமையாதா என்பதையும்;

(ii) யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் முப்படையின் மருத்துவ படையணியில் இணைந்து ஆற்றியுள்ள சேவையை பாராட்டாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மருத்துவர்களை ஆட்சேர்க்கின்றபோது தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவுகள் மற்றும் 14.4 மற்றும் VII ஆம் அத்தியாயத்தின் 9.3 மற்றும் 9.4 பிரிவுகளுக்கு அமைய பெற்றுக் கொடுக்கத்தக்க அனுசரணைகளைப் பெற்றுக் கொடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3916/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இலங்கை இராணுவப் படைக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வாகனத்திற்கும் செலுத்தப்பட்ட பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்;

(iii) வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாகனங்களுக்கு 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி காலப் பகுதிக்குள் வாடகை அடிப்படையில் இலங்கை இராணுவப் படையில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4055/ '13

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் காணிகள் வழங்கப்பட்ட கண்டி குருதெனிய, ஹாரகம கிராம அலுவலர் பிரிவின் 3 ஆம் கொலணியிலுள்ள 130 வீடுகளில் வசிக்கின்ற மக்கள் 1983 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை குடிநீர் வசதிகள் இல்லாமை காரணமாக பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்;

(ii) தமது அன்றாட நுகர்வுக்காக நீரைப் பெற்றுக் கொள்வதற்கு இம்மக்கள் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(iii) நீர் வழங்கல் சபையின் மதிப்பீட்டுக்கு அமைய மேற்படி பிரதேசத்திற்கு நீர் வழங்கலைப் பெற்றுக் கொடுப்பதற்கான கருத்திட்டத்திற்கு ரூபா 36 மில்லியன் அவசியமாக உள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்திற்கு நிதியைப் பெற்றுக் கொடுத்து குறித்த பிரதேச மக்களுக்கு குடிநீர் வசதிகளைத் துரிதமாகப் பெற்றுக் கொடுக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 ஒற்றோபர் 10, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2604/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் பொழிப்பின் 69 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச ஊழியர்களின் நியமனம், இடமாற்றம் ஆகியன தொடர்பாக ஆட்சியிலுள்ள கட்சியின் அரசியல்வாதிகளின் தலையீடு அதிர்ச்சியளிக்கும் காரணியொன்றாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஆணைக்குழுவினால் சுயாதீன பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவொன்று தாமதமின்றி நியமிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ள சிபாரிசு செயற்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இவ்வாணைக்குழு நியமிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2933/ '12

கௌரவ புத்திக பதிரண,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் வெலிகம பிரதேச செயலாளர் பிரிவின் வல்லிவல மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அபிமானகம வீடமைப்புத் திட்டம் அமைந்துள்ளதென்பதையும்;

(ii) 1985 ஆம் ஆண்டில் வெலிகம, அபிமானகம வீடமைப்புத் திட்டத்திற்கு அருகாமையிலுள்ள காணியொன்று இலங்கையின் முதலாவது நகர வனப் பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டது என்பதயும்;

(iii) வனப் பூங்காவை கொண்ட மேற்படி காணியை 2012 மே மாதம் 23 ஆம் திகதி தினமின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் ஊடாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நகர வனப் பூங்காவை விற்பனை செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2943/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளையும்;

(ii) உண்மையில் கல்விக்காக செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) மேற்படி தொகைகள் உண்மையில் செலவிடப்பட்ட செலவினத் தலைப்புகளையும்;

(iv) கல்விக்காக மாதாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் அப்பணம் மாற்றப்பட்டுள்ள செலவினத் தலைப்புகள் ஆகியவற்றையும்;

(v) வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3265/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மில்கோ கம்பனியின் அம்பேவெல கிளையில் பால் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் இல்லை என்பதை அவர் அறிவாரா;

(ii) அம்பேவெல கிளையில் களஞ்சிய வசதி இன்மையினால் பால் மாவை உற்பத்தி செய்வதற்காக கிரீமாக மாற்றப்பட்டிருந்தபோது அப்புறப்படுத்தப்பட்ட பால் லீற்றர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) மேற்படி பாலின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மில்கோ கம்பனியின் மாதாந்த வருமானம் மற்றும் தேறிய இலாபம் எவ்வளவு என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3349/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3412/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வேரெஸ் கங்கை மழை நீர் வெளியேற்றம் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம் என்ற பெயரிலான ஒரு கருத்திட்டத்திற்காக தனியார் காணிகளை அரசாங்கத்தினால் சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காணிகளின் அளவு எவ்வளவு;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அரசினால் சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு நட்டஈடு செலுத்தும்போது பின்பற்றப்படும் கொள்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3441/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக சீனாவிடமிருந்து மேலதிகமாக 153 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கடன் எந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் (வட்டி வீதம், கால எல்லை, வேறு கட்டணங்கள்) கீழ் பெற்றுக்கெள்ளப்பட்டது என்பதையும்;

(ii) எவ்வங்கியிடமிருந்து இக்கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் தரகர்கள் சம்பந்தப்பட்டிருப்பின் அவர்கள் உள்நாட்டவர்களா அல்லது வெளிநாட்டவர்களா என்பதையும்;

(iii) அனைத்து மூலங்களிலிருந்தும் இதுவரை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் மற்றும் அவை ஒவ்வொன்றினும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கடன் நிபந்தனைகள் மூல ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டதன் பின்னர் எப்போதாவது மாற்றப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவரா?

(இ) இன்றேல், ஏன்?

3513/ '13

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த திப்பட்டுமுல்ல கனிஷ்ட வித்தியாலயம் பல வருடங்களாக மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலய வளவு மற்றும் கட்டடங்கள் சம்பந்தமாக மாகாண சபையோ மத்திய அரசாங்கமோ இற்றைவரை எவ்விதமான கவனமும் செலுத்தவில்லையென்பதையும்;

(iii) இதன் காரணமாக ஒருசிலர் வித்தியாலய வளவினை கைப்பற்றியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி வித்தியாலயத்திற்குச் சொந்தமான காணியளவு, கட்டடங்களின் எண்ணிக்கை மற்றும் ஏனைய பௌதீக வளங்கள் யாவை என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) திப்பட்டுமுல்ல கனிஷ்ட வித்தியாலயம்

(i) மூடப்பட்ட திகதி;

(ii) மூடப்பட்ட வேளையில் கல்வி பயின்ற மாணவர் எண்ணிக்கை மற்றும் சேவையாற்றிய ஆசிரியர் எண்ணிக்கை;

(iii) மூடப்பட்டமைக்கான காரணங்கள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மூடப்பட்டுள்ள இப்பாடசாலையை அபிவிருத்திசெய்து மீண்டும் ஆரம்பிக்க அல்லது பாடசாலை வளவினையும் அதன் கட்டடங்களையும் வேறு பயனுள்ள பணிக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3536/ '13

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் (TNA) நிர்வகிக்கப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு அம்மாகாண ஆளுநரிடம் வழங்கப்பட்ட பணத்தின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) உள்ளூராட்சி அமைப்புக்களிலிருந்து யாருடைய பணிப்புரையின் பேரில் இப்பணம் அறவிடப்பட்டதென்பதையும்;

(iii) கூறப்பட்ட பணம் எக்காரணத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3601/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொரிய நாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களில், 2012 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக கொரியாவில் தொழில் வாய்ப்புகளுக்காக சென்றுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவ்வாறு அனுப்பப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3729/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "மஹிந்த ராஜபக்ஷ" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ள இலங்கையின் துறைமுகங்கள், கலையரங்குகள், விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் யாவை என்பதையும்;

(ii) இப்பெயரால் மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் அல்லது கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட திகதிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அல்லது கருத்திட்டத்திற்கும் செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பாடசலைகள் மற்றும் வைத்தியசாலைகள் தவிர்ந்த மேலே குறிப்பிடப்பட்ட வருமானம் ஈட்டும் நிறுவனங்களிலிருந்து இற்றைவரை இந் நாட்டிற்குக் கிடைத்துள்ள வருமானம் எவ்வளவென்பதையும்

இவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3779/ '13

கௌரவ விஜித பேருகொட,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள மொரட்டுவ/பாணந்துறை, அம்பதலே மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களுக்கு நீர் சுத்திகரிப்பு வசதிகளை வழங்கும் கருத்திட்டத்தின் நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) அதன் வேலைகள் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) இதன் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்துக்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி பணத் தொகையை செலவிட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3860/ '13

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்ரம,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாது;

(ii) மேற்படி நிறுவனம் அரசாங்க கருத்திட்டங்களுக்கு நல்கிய பங்களிப்பு யாது;

(iii) அறிவின் பெறுமதியை பரப்புவதில் ஆற்றிய பங்களிப்பு யாது;

(iv) மேற்படி நிறுவனத்தின் எதிர்கால திட்டங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3862/ '13

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேகா,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டத்தினதும் பரப்பளவு மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பயிர்ச்செய்கைகள் வெவ்வேறாக யாவை;

(iii) கடந்த அண்மித்த 10 ஆண்டு காலப்பகுதியினுள் ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் பெறப்பட்ட வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3865/ '13

கௌரவ மனுஷ நாணாயக்கார,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தெங்குக் கைத்தொழில் விருத்திக்காக தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு, தெங்குச் செய்கையை மேற்கொள்ளும் ஏனைய நாடுகளுடன் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இவ்வாறான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டுடனும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி புரிந்துணர்வு உடன்படிக்கைகள் இலங்கையின் தெங்குக் கைத்தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தை சுருக்கமாக விளக்குவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2013 ஒற்றோபர் 11, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2614/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹக்வட்டுனாவ எனும் பெயரில் நீர்ப்பாசன திட்டமொன்று உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஹக்வட்டுனாவ நீர்ப்பாசன திட்டத்தின் கீழ்,

(i) எத்தனை ஏக்கர் நெற்காணி பயிர்செய்கை செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) பயன்பெறும் விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சிறு போகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரண்டு போகங்களிலும் நீரைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாயுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு இயலாதிருப்பின், அவ்வாறு செய்வதற்கு இயலுமானவாறு ஹக்வட்டுனாவ நீர்ப்பாசன திட்டத்தை விருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2897/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. லசந்த விக்கிரமதுங்க எப்போது கொல்லப்பட்டார் என்பதையும்;

(ii) மேற்படி கொலை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த குற்றவியல் விசாரணைப் பிரிவு (சீ.ஐ.டி.) எது என்பதையும்;

(iii) சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்து இவ்விடயத்திற்குப் பொறுப்பாக்கப்பட்ட உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(iv) இக்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேற்படி கொலைச் சம்பவத்தின் விசாரணையில் ஒரு வகை அசட்டை காட்டப்படுகிறதா என்பதையும்;

(ii) ஏதாவது காரணத்திற்காக இக்கொலைச் சம்பவத்தை மூடி மறைக்க அரசாங்கம் விரும்புகிறதா என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல் ஏன்?

2989/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் லாகுகல பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான பானம சாஸ்த்ரவெல பிரதேசத்தில் 1220 ஏக்கர் அளவினதான காடுகளும் விவசாய நிலங்களும் கடற்படையினராலும் விசேட அதிரடிப் படையினராலும் சுவீகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பில் 'ரணவிரு' கிராமமொன்றையும் கடற்படை முகாமொன்றையும் ஹோட்டல் தொகுதியொன்றையும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி நிலப்பரப்பில் அமைந்துள்ள பெலும்காராராம விகாரை உள்ளிட்ட மேலும்பல தொல்பொருளியல் சார்ந்த இடங்களுக்குப் பிரவேசிப்பது மக்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ள தென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்பட்டமையால் பிரதேசத்தின் மக்கள் வாழ்க்கைக்கும் இயற்கைச் சூழலுக்கும் தீவிர தாக்கம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட காணிகளை சுவீகரிப்பதற்காக சட்டபூர்வ அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்படுவதால் காணிகளையும் ஆதனங்களையும் இழக்கின்ற மக்களுக்கு மீண்டும் காணிகளை அல்லது நட்டஈட்டினை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2997/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக வழக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வழக்குகளில் தற்போது விசாரணை மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் விசாரணை முடிவடைந்துள்ளவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2009ஆம் ஆண்டு முதல் இற்றைவரை விசாரணைக்கு எடுக்கப்பட்ட சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் உயர்ந்தபட்ச தண்டனை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3061/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) களுத்துறை மாவட்டத்தில் ஹொறனை, மத்துகமை மற்றும் களுத்துறை ஆகிய கல்வி வலயங்களில் அமைந்துள்ள அனேக பாடசாலைகளின் கட்டிட நிர்மாணப் பணிகள் நிதியின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்வி வலயத்தில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணிப்புக்காக அரசாங்கம் ஒதுக்கிய நிதிக்கு என்ன நடைபெற்றது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் தேவையான நிதித்தொகை யாது;

(iv) உரிய நிதி ஏற்பாடுகளை விரைவில் ஒதுக்கீடு செய்து, குறித்த பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3351/ '12

கௌரவ பி.ஹரிசன்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3686/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குவைட் நாட்டிற்கு தொழில்வாய்ப்புக்காகச் சென்றுள்ள இலங்கைப் பெண்கள் 300 பேருக்கும் அதிகமானவர்கள் அங்கு அவர்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ள பல்வேறு தொல்லைகள், கஷ்டங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக சேவை நிலையங்களிலிருந்து தப்பிச் சென்றுள்ளதனால் வேறு எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டும் உள்ளார்கள் என்பதையும்;

(ii) அவ்வாறு கஷ்டங்கள், துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கை ஊழியர்களின் கஷ்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக குவைட்டிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அலுவலர்களிடமிருந்து மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான முறையான, துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தற்போது குவைட் நாட்டில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை துரிதமாக இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3775/ '13

கௌரவ விஜித பேருகொட,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அவசரகால சட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வாறு இணைப்பதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டு மாகாணங்களாக மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி மாகாணங்களை பிரித்தலானது, உயர்நீதிமன்ற வழங்குத் தீர்ப்பொன்றுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) இன்றேல், அவ்வாறான வழங்குத் தீர்ப்பொன்று வழங்கப்படுவதற்கு முன்னதாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2615/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் தொரட்டியாவ முதல் கோன்பல வரையிலான பாதை மிக மோசமாக பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக இப் பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாதையை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் தேதி யாதென்பதையும்;

(ii) அதற்கு செலவாகும் மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(iii) இப் பாதையை திருத்தியமைக்கும் கருத்திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் தேதி யாதென்பதையும்;

(iv) இப் பாதையைத் திருத்தியமைப்பதைப் பூர்த்திசெய்து மக்களுக்கு கையளிக்கும் தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2937/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தொகை மதிப்பீட்டுக்கான மொத்தச் செலவையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொகை மதிப்பீட்டின் போது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்;

(iii) சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் மற்றும் ஏனையோர் என்ற இன அடிப்படையில் நாட்டின் சனத்தொகையையும்;

(iv) பௌத்தம், கிறிஸ்தவம் (அனைத்துப் பிரிவுகளும்), இந்து, இஸ்லாம் என்ற மத அடிப்படையில் நாட்டின் சனத்தொகையையும்

(v) ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வீடுகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) குடிசனத்தொகை மதிப்பீட்டுத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான கொள்வனவு விலைமனுக் கோரல் தொடர்பில்,

(i) விலைமனுவினைப் பெற்றுக்கொண்டவரையும்;

(ii) ஒவ்வொரு வினைமனுவிற்கும் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள், தொகை போன்றவற்றை வெவ்வேறாகவும்;

(iii) விலைமனுக் கோரல் சபைக்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2990/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தின் கித்துள்கல களணிவெளி ஒதுக்கத்திற்கு சொந்தமான வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற மாகன்தூவ ஒதுக்கத்திற்கு குறுக்காக கித்துள்கலவில் இருந்து பள்ளேபாகே வரை வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) மேற்படி வீதி நிர்மாணிக்கப்படுவதால் கடுமையான சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதாக சுற்றாடலியலாளர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்கள் என்பதையும்;

(iii) ஏற்படுகின்ற சுற்றாடல் சேதத்தை தடுப்பதற்காக மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாகன்தூவ ஒதுக்கத்திற்கு குறுக்காக மேலே குறிப்பிட்ட வீதியை நிர்மாணிக்க சட்டபூர்வமான அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) ஏற்படுகின்ற சுற்றாடல் சேதத்தையும் அதனோடு சம்பந்தப்பட்ட மக்கள் எதிர்ப்பையும் கருத்திற்கொண்டு மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3254/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அண்மையில் மடிக் கணினிகள் வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஊடகவியலாளர்களின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மடிக் கணனிகளை வழங்குவதற்காக ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி கணனியொன்றின் விலை எவ்வளவு என்பதையும்;

(v) இற்றைவரை வழங்கப்பட்டுள்ள மடிக் கணனிகளுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3267/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறையிடமிருந்து கொழும்பு மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள மொத்த நிலுவை வரிப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டுக்காக மேற்படி நகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த வரிப் பணத் தொகையின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3352/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2616/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் வெல்லவ, ஹதிரவலான ஊடாக புதுனாப்பிட்டிய வரை செல்கின்ற பாதை பெருமளவு சிதைவடைந்துள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக பெருமளவிலான பிரதேசவாசிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாதையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) இதற்காகச் செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பாதையை திருத்துவதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்,

(iv) இப்பாதையின் திருத்தத்தைப் பூர்த்தி செய்து மக்களுக்கு ஒப்படைக்கும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?